# புதுக் குரல்

கம்பதாசன்

20
18620
04

"நிழல்"

திருவல்லிக்கேணி, சென்

# வெளி வந்து விட்டது.

—o—

1. இருக்கின்றேன் (நேதாஜி) விலை ரூ. 0 6 0
(கம்பதாசன்)

2. புதுக்குரல் விலை ரூ. 0 12 0
(கம்பதாசன்)

3. தமிழ் மாணவன் விலை ரூ. 0 8 0
(முத்தமிழ்மணி)

4. தாஸி (நாவல்) விலை ரூ. 1 4 0
(சிரஞ்சீவி)

5. தமிழரும் பிரிட்டிஷ் திட்டமும்
விலை ரூ. 0 6 0
(ம. பொ. சிவஞான கிராமணியார்)

—o—

வேண்டும் பிரதிகளுக்கு

## ழல் காரியாலயம்

லிக்கேணி :: சென்னை 5

# புதுக்குரல்

கம்பதாசன்

நிழல் காரியாலயம்

திருவல்லிக்கேணி சென்னை 5

முதற் பதிப்பு : நவம்பர் 1946.

விலை ரூ. 0—12—0

நிழல் காரியாலயம்

திருவல்லிக்கேணி சென்னை.

Universal Printers, G. T., Madras Q. H. No. M. S. 35

# பதிப்புரை

கவிஞர் கம்பதாசன் அவர்களைப்பற்றி தமிழுலகம் நன்கறியும். அவரது கற்பனைத் திறனையும் கவிதை மேம்பாட்டையும் படித்து அனுபவித்து மகிழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் இப் புதுக்குரல் என்ற சிறந்த நூலை ஆவலுடன் எதிர் பார்ப்பார்களென்பது திண்ணம். அவர் இச் சிறந்த நூலை தந்துதவியதற்கு நன்றி செலுத்துகிறேன்.

வணக்கம்

லெ. அருணாசலம்

'புதுக்குரல்' என்ற தலைப்பின் கீழ் என் சிறு சிறு துணுக்கு பாடல்களை பெரிய மனதுடனும்—இலக்கியத் தெளிவுடனும் வெளியிட முன் வந்த "நிழல் காரியாலயம்" தோழர்களுக்கு என் நன்றி!

ரசிக தமிழன்பர்கள் இந்த வெளியீட்டில் புகுந்துள்ள கருத்தை வரவேற்பார்களென நம்புகிறேன்!

முகாம் 'கம்பதாஸன்'

சென்னை

2—11—1946

# புதுக்குரல்

புழுதியென எமைமிதித்துப் போகின் றீர்கள்
பொறுத்திருந்தோம், பொறுத்திருந்தோம் இத்தனை [நாள்!

அழுதழுது முறையிட்டு அலுத்துப் போனோம்;
அனுதாபம் காட்டிடுவோர் யாருமில்லை!

பொழுது புலர் வேளைதனில் வீசும் காற்றுப்
புழுதிதனில் புதுஜோதி பூத்திடாதோ?

விழிமலரச் செய்தபுது விழிப்பினாலே
விண்ணிடிபோல் போர்முரசு கொட்டுகின்றோம்!

* * *

புகைகொளுத்தும் தீக்குச்சு என்று எம்மைப்
புன் நெருப்பாய் எண்ணமிட்டுப் போகின்றீர்கள்!

தகைமிகு அச் சிறுநெருப்பில் சகத்தை எல்லாம்
சாம்பலென மாற்றும்தனி சக்தியுண்டு!

நகையுறுத்தி நாண்மலரை விழிக்கச் செய்யும்
நல்லருணன் போன்றவொரு விழிப்பினாலே

தொகைத் தொகையால் எழுங்கடலின் திரைகள் போல
தூமதிரோர் போர்சங்கம் ஊத வந்தோம்!

* * *

பயமுடனே இத்தனைநாள் கைகள் கட்டிப்
பட்டிட்ட துயரங்கள் போதும் போதும்!

வயலுழுதோம்; வீதியிட்டோம்; வீடமைத்தோம்!
வாழ்விற்குத் தேவையெலாம் வழங்கி, நாங்கள்

புயமலுத்தோம்! பசித்தீயில் பெண்டு பிள்ளை
புழுப்போல துடிதுடித்து வேகுதையோ!

அயர்விலாதப் புதுவிழிப்பு கொண்டு விட்டோம்!
அச்சமில்லை, பழிக்குப் பழி வாங்க வந்தோம்!

* * *

எமதுகையால் செய்தளித்த ஆயுதத்தால்
எமையேநீர் கொல்லுதற்கு இச்சை கொண்டீர்;

உமக்குணவு அளித்தஎம் கைகளாலே
உம்குலத்தை வேரறுக்க நேரம் ஆமோ?

அமைதியுடன் இருந்திட்ட ஆகாயத்தில்
அதிர்இடியும் மழைப்புயலும் தோன்றி விட்டால்,

சுமைசுமையாய் விறகிட்டுக் கொளுத்தினாலும்
சுட்டிடுமோ? ஒற்றுமையால் சூழ்ந்து வந்தோம்!

* * *

உலர்ந்திருந்த புல்லினிலே உரங்கொள் வாள்தான்
உண்டாகி விட்டதென்று உரைத்து விட்டோம்!

கலகமிலாப் புதுக்குரலில் முழங்கு கின்றோம்!
கண்ணுள்ளோர் தங்களுக்கே காட்சி வேண்டும்;

நலமுறவே உழைப்பவர்க்கே உணவு வேண்டும்!
நியாயமிது; நியாயமிது; நியாய மிஃதே!

'அல'வென்னவே மறுப்பவர்கள் கடவுளேனும்
அடுத்தகணம் அவர்தலைஎம் காலில் வீழும்!

# படைப்பு

கோவைக் கனியைப் படைத்த கையே—அதைக்
கொத்த் கிளியைப் படைத்தது!
பூவினில் தேனைப் படைத்த கையே—பணி
புரிபல்லி நஞ்சைப் படைத்தது!

காவியம் எழுதிப்படைத்த கையே—அதில்
கற்பனைப் பொய்யைப் படைத்தது!
கோவிலைப் படைத்த கைகளே—சிலை
சோறு உணவைப் படைப்பதோ ?

*        *        *

# தெரியுமா?

நித்திரைபோம் மலர்மொட்டுகள்மேல்—மெள்ள
நீந்தியே வந்திடும் மாருதந்தான்
சித்திரம் போலுள்ள என்னைக் கண்டு—நாளும்
சீட்டி யடித்திடும் காரணம் என்?

* * *

பாம்பு படமெடுத் தாடுதல்போல்—நீலம்
பாய்ந்த கடல்அலைக் கைகள் காட்டி
சாம்பல் என உள்ள என்னை நோக்கி—பெரும்
சத்தமிட் டழைக்கும் காரணம் என்?

* * *

கடலில் மிதந்திடும் பனிக்கட்டிபோல்—நீள்
ககனம் மிதந்திடும் வெண்முகில்கள்
சடமாய் இருந்திடும் என்னைக் கண்டு—ஓயா
ஜாடை புரிந்தோடும் காரணம் என்?

* * *

இசையை விரும்பிடா நெஞ்சுபோன்ற—மை
இருள்தான் விடியலில் ஏகும்போது
பசியை மறந்து இருந்த என்னை—ஒரு
பார்வை பார்த்தேகிய காரணம் என்?

# கண்ணீர்ப் பொங்கல்!

உலகைப் படைத்த தொழிலாளி—முதல்
உகுத்தக் கண்ணீர்த்துளி வானத்திலே
இலங்குது காணுவீர் இரவியென—அஃதே
ஏர் தொழிலாளரின் ஈசனாகும்!

* * *

பசுமைப் படர்ந்த கார்முகிலே—மின்னிப்
பாய்ச்சிய கண்ணீர்த் துளிகளையே
புசித்திட்ட நஞ்சை நிலமதுதான்—நெல்லாம்
பொன்னிறக் கண்ணீரைச் சிந்தியதே!

* * *

மெய்தான் உய்ந்திடக் கண்ணீர்களே—செய்யும்
மேன்மையாம் த்யாகச் செயல் நினைந்து
கைகள் குவித்து வணங்கிடுவோம்—மதி
கண்ட கடலெனப் பால் பொங்கவே!

# கல்யாணம்

கல்யாணம் என்றிடில் என்ன?—அது
 கண்ணும் பூச்சி எனும் ஆட்டமதா?
தொல் புவிக்கும் நல் வானத்திற்கும்
 வல்விதியே கட்டும் பாலமன்றோ?

*　　　　*　　　　*

திருமணமே என்றால் என்ன?—அது
 சித்திரமே தீட்டி அழிப்பதுவா?
கருமமும் காதலும் கைகோத்து
 காலத்தைப் பார்த்துச் சிரிப்பதன்றோ?

# தீபாவளிக் குருடன்

*தீபமென்றால் என்ன ஐயனே?—அதுதான்*
*தித்திக்குமோ, துவர்க்குமோ, புளித்திடுமோ?*
*கோபம் போலே கொதித்திடுமோ?—இருண்ட*
*குருடன் எனைப் போல சிட்டங்கட்டுமோ?*

*பள்ளம் மேடு தெரிந்திடாதோ?—எனைப்போல்*
*பறையர் பார்ப்பனரென அறிந்திடாதோ?*
*வெள்ளம் பட்டால் அணைந்திடுமோ?—இந்த*
*விழியற்றோன் பசியுற்று மரிப்பது போல்!*

*படர்ந்திடும் வழிகாட்டவே—தினம் நான்*
*பாங்கனைப் பற்றிச் செலும் ஊன்று கோலைப் [போல்,*
*சுடர்தூவும் தீபந்தனக்கும்—துணையாய்த்*
*தூண்டுகோல் என ஒன்றும் வேண்டுமன்றோ?*

*காற்றில்அணை ஊமை தீபத்தைத்—தொழுது*
*களித்தோம் துதித்தோம்; தீபாவளியென்கிறீர்!*
*காற்றில் நின்று பேசும் தீபமாம்—எனையே*
*கண்டு போற்ற உங்களுக்குக் கண்களில்லையோ?*

# மயில்

வானத்து மின்னற் குழம்பினிலே—ஒளிர்
மரகத மணியின் பொடி தூவி
மோனத்தழகே படைத்ததுவாம்—கார்
முகில்கண்டு ஆடும் மயில்மேனி!

* * *

இளம்பிறை தன்னிலே ஆயிரமும்—வான்
இந்திர வில்லினில் ஆயிரமும்
கலந்திழையும் திருக்காட்சியடா!—முகில்
கான நடமிடும் தோகையின் கண்!

* * *

ஆண்பெண் உடலம் சங்கமத்தால்—அன்பு
அன்றே அழிவுற்றுப் போகுமென
காண்பிக்கக் காதல் படைத்ததுவாம்—இன்பக்
காவியத் தோவியம் கானமயில்!

* * *

கந்த மலர்ச் சோலைக் கன்னிமயில்—தன்

கண்களால் தாய்ப்பால் குடித்ததுபோல்

விந்தைமிகும் அதன் கண்ணைச்சுற்றி—முத்து

வெள்ளைநிற வட்டம் தோன்றுதடா!

* * *

சரக்கூடத் தோகைதனை விரித்து—வளை

தாரைநிகர்க் கழுத்தை நெளித்து

பரதநடனமே பயிலுதடா!—மனப்

பரவசமாய் எழிற் பள்ளியிலே!

# ஆடு

கூர்ந்து தரை நோக்கிக்—கறுத்த
ஆட்டுக் குட்டி யிரண்டு
சோர்ந்து கிடந்தனவே—இருளே
துண்டு பட்டாற் போலே!
நேர்த்தி நிலவினிலே—கறைதான்
நின்று ஒளிர்வதுபோல்
பார்த்த அதன் விழிகள்—கண்ணீர்ப்
பாய உரைத்ததென் பால்:—

*　　　*　　　*

"மாமலைகள் ஏறி—பசியை
மாற்றத் தழை தின்று
பூமி செழித்திடவே—எமது
புழுக்கை எருவாக்கிச்
சேமம் மக்கள் அடைய—வலிமைத்
தேக்கு நற் பால் அளித்தோம்;
சாமிப் பெயர் அதனால்—எமது
தலையை வெட்டுவதோ?

சாவில் மறைவதற்கு—நாங்களே
சற்றுமே அஞ்சவில்லை!
பூவில் பிறந்தயாவும்—மரணப்
பொன்னடி புகல் திண்ணம்!

* * *

நோவுறும் மக்களுக்கு—மருந்து
நூறாண்டு செம்மைபெற!
சாவு கொடுப்பதினால்—கடலில்
காண் அலை நின்றிடுமோ?"

* * *

# உயிருதயம்

இருளின் நிழலே ஒளிமலர்ச்சி;—மக்கள்
இறப்பின் நிழலே உயிருதயம்
தருவின் நிழலே தண் காற்று;—அன்புத்
தாயின் நிழலே செந்தமிழே!

கடலின் நிழலே முத்துமழை;—கலைக்
கன்னி நிழலே வட்ட நிலா;
விடத்தின் நிழலே அணிரத்னம்;—ஏழை
விழிநீர் நிழலே நட்சத்திரம்!

பருவ நிழலே சுவை முத்தம்;—மனம்
பண்பின் நிழலே வாழ்க்கை நலம்;
உருவ நிழலே விதிப்பாதை;—ஒரு
உண்மை நிழலே தெய்வமடா!

# கலாவல்லி

விண்ணென்ற வெண்மலர்மேல்
வெண்மதியாய் வீற்றிருப்பாள்;
மண்ணெல்லாம் மகிழ்ந்திடவே
மழையென்ற யாழிசைப்பாள்!

கற்பனையாம் கடல்மூழ்கிக்
கவிதையெனும் முத்தெடுப்போர்
அற்புதமாம் நெஞ்சிடையே
அழற்சுவாலை எனநடிப்பாள்!

உழைப்பென்னும் சோலையிலே
உவகைமுல்லை யாய்சிரிப்பாள்;
அழைப்பின்றி வராள்; வரினோ
ஆவிபோ யினும்போகாள்!

உள்ளத்தின் உண்மைதனை
உணவாகக் கொண்டுண்பாள்;
கள்வர்தம் பயமறியாள்;
காலத்தை வென்றிடுவாள்!

ஒயில்தேக்கும் இயற்கையெனும்
ஓவியத்தைத்தான் வரைந்தாள்;
வைரத்தை நேர்தமிழர்
வாழ்வாம் கலா வல்லியே!

# கவிதை

அதிகம் குடித்தவர் நாவினிலே
அளவின்றி வந்திடும் வார்த்தையைப் போல்
முதிர்ந்த அறிவின் கடலினிலே
முத்தென முளைத்தல் கவிதையடா!

* * *

கதிர் தனை வீசிடும் தீபந்தனை
கவ்விடும் சிட்டம் தனைத்தட்டி
புதிய ஒளி எழச் செய்வதனைப்
போன்றது புதுமைக் கவிதையடா!

* * *

குழந்தையே சிந்திய பருக்கைகளை
கொத்திப் பசியாறும் கோழியைப்போல்
இழந்த கருத்துதனைக் கூட்டி
இன்பம் அடைவது கவிதையடா!

* * *

ரசமது கொண்ட கண்ணாடிபோல்
ரகசியம் தன்னை அழகதனால்
வசியமாய் மூடி அவரவரின்
வண்ணம் வகுத்தல் கவிதையடா!

# தீட்டொணாச் சித்திரம்

எந்தன் காதலனின் வடிவை—இங்கு
எழுதும் சைத்ரிகனும் உண்டோ?
அந்தம் தியவன் இருகண்;—தாய்
அன்பதுவே அவன் வதனம்.

*　　　*　　　*

எண்ணங்களே அவன் கூந்தல்;—மர்ம
இறப்பும் பிறப்பும் அவன் இதழ்கள்;
உண்மை யதே யவன் நிற மாம்;—குளிர்
உலவும் காற்று அவன் இமைகள்.

*　　　*　　　*

இரவும் பகலும் அவன் கால்கள்;—வரும்
இன்ப துன்பம் அவன் கைகள்;
திறலும் அருளும் அவன் கன்னம்;—எழும்
திகைப்பும் வியப்பும் அவன் புருவம்.

*　　　*　　　*

செய்கையதே அவன் நாசி!—மனத்
தெளிவும் ஒளிவும் அவன் செவிகள்;
உய்வதுவே அவன் பற்கள்—குன்று
ஒளியதுவே அவன் நகையாம்.

# புதிர்

சிலந்தியென என்னுளிலே யான் கூடு கட்டி
சிறகடித்துச் சுழல்கின்ற வெறியைத் தின்ன

கலக்கமுறும் எண்ணங்கள் கரிந்து போக
களை தீர மதுவருந்திக் களித்திருப்பேன்

உலகம் எனை நோக்கியெறி வசைத்துகள்கள்
உற்ற இருள் வான் மின்னும் உடுக்கணமாம்

நிலவெழுந்து கவின் விரியக் குடை நிழற்றி
நினைவழியக் கனவில் அலை நிஜத்தைப் பாடும் !

ஊனமுறும் உடற் கிண்ணி தன்னில் ஆடும்
உயிரதுதான் கள்ளன்றோ? ஒயிலணங்கு

வானனைய விழி என்ற வள்ளம் தன்னில்
வார்த்திடு நல் ஒளியதுவும் மதுவே யன்றோ?

மாளிலமாம் பேலாவில் காலம் மாந்தும்
மரணமதும் கள்ளன்றி மற்றதென்ன?

தேனதிலே தீயதனின் மணம் நுகர்தல்
தெய்வத்தைத் தீண்டுமொரு செய்கை யன்றோ?

# வருவாளா?

காக்கைசிறு குஞ்சொன்று வாய்பிளந்தாற் போலே
கங்குலினைப் பின்வைத்து முன்னின்ற செக்கர்

நோக்கிவரு கருமுகில்கள் பொன்மெருகு கொள்ளும்
நூதனத்தை விழிகளினால் சிறைச்செய்து நின்றேன்

தாக்கியது என்செவியை! என்ன அது? அடடா!
தணியாத பெரும்போதை தமிழ்ப்போதை போலே

ஊக்கியது நாடிகளை; உயிரிலோர் மலர்ச்சி
உண்டாகக் காதல்தேன் ஊட்டியது தென்றல்!

*　　*　　*

முத்தம்தரு தென்றல்எனும் மோகனப்பெண்ணோடு
முத்தம்நிகர் முல்லையது மொட்டவிழும் காட்சிச்

சித்திரமே பார்த்திருந்தேன்; சிலிர்த்ததடா வானில்
தேன்துளியில் வைரப்பொடி தேக்கம்என உடுக்கள்!

கத்தியது காவின்குயில் கவிக்கனவு கண்டு!
காலமெனும் குருடன்தான் கைவீசி வந்தான்!

சித்திரையில் எனை ஆழ்த்தி நெஞ்சத்தைக் கவர்ந்து
நிலவுதனைக் காவல்வைத்து உலவுதென்றல் சென்றாள்

# உயிர்த்தெழுங்கள்!

எண்ணங்களை இரைகடலுள் முத்த—தாக
எல்லையிலா வானிடை நட்சத்திரமாய்
திண்மையுறு மலைகளினுள் வைரமாக
திசைமறைக்கும் கான்மரத்தின் வேர்களாக
மண்ணினிலே வைத்திட்டு மரணமுற்ற
மானிடரே! உயிர்த்தெழுந்து வாரீர்! வாரீர்!
கண்ணியமும் காந்தி மகான் பரத நாட்டின்
கட்டிடமை இருள்துடைக்கும் காட்சி காண.

பாவிகளின் விடுதலைக்கு சிலுவை தன்னில்
பதைபதைக்க பட்டிட்ட யேசு நாதா!
ஆவிஒரு முறை எய்தால் சாவை வெல்ல
அன்பதுவே போதுமென்றும் இறந்த புத்தா!
மேவுஎதும் நானெனவே கீதை சொல்லி
மீண்டும்துயில் கொண்டிட்ட கண்ண மூர்த்தி!
பூவிலிலே எளியவனும் காந்தி பூமான்
புத்தொளியாம் சக்ரமெனும் ராட்டை காண.

# வேண்டுகோள்

எண்ணம் எழும்நெஞ் சம்வேண்டாம்—அதால்
எங்கும் கவலைகள் வேண்டாம்
மண்போல் விண்போல் என்றனையே—இங்கு
மௌனம் அடைந்திடச் செய்திடுவாய்!

என் இனம் என்குலம் என்மக்கள்—இலார்
என்றெனி உதவிடும் செய்கைவிட்டு
இந்நிலம் இருக்கும் யாவருக்கும்—உதவ
இரவிபோல் மழைபோல் எனை மாற்றாய்!

கடமை என இது மடமைஎன—சொலும்
கட்டுப்பாட்டினில் அடங்காமல்
உடலின் சுமையற்று சுதந்திரமாய்—என்றும்
உலவிடும் காற்றாய் எனையாக்காய்!

# மகாத்மா சரணம்!

---

உண்கனி பிறருக் குதவ
உயர்கிளை வளைதல் போல
தண்மணம் பிறர்க்கு தந்து
சந்தனம் தேய்தல் போல
மண்ணிடை துன்ப இருளை
மறைத்திட நாளும் உழைக்கும்
புண்ணியக் கண்ணின் காந்தி
புனிதனே சரணம் சரணம்!

* * *

சித்தரும் புத்தர் தேவர்
சிறந்திடப் பிறந்த தேச
உத்தம குணங்க ளெல்லாம்
ஓர்வடி வாகப் பெற்று
சத்தியப் பீடம் நின்று
தனிநிகர் ராட்டைக் கொண்டு
தொத்தடி மைத்தளை அறுக்கும்
தூயனே சரணம் சரணம்!

* * *

சீதமாம் வானில் உடுக்கள்
சிதறியே கிடந்திட் டாலும்
ஆதவன் முகமே காணில்
அனைத்தும் ஒன்றா கிடாதோ?
பேதமாம் ஜாதிப் போரில்
பிரிவினை யடைந்த நாங்கள்
சூதியா நின் அகிம் சைகண்டு
சூழ்ந்தனம் சரணம் சரணம்!

* * *

ஆவினம் மேய்த்த கண்ணன்
அருங்குழல் ஊதி னாற்போல்
பூவினில் சுதந்திர மாகும்
போதமே செய்து விட்டாய்
நோவுற அடித்து, சிறையில்
நுழைக்கினும் பரத நாட்டின்
சேவையில் உமக்கே எங்கள்
ஜீவனே! சரணம் சரணம்.

* * *

# நா

துளிரின்றேல் மரக்கிளையில்
தோன்றிடுமோ காற்று?
குளிர்கடலில் அலையின்றேல்
கோஷமதும் உண்டோ?
வெளிதனிலே மின்னின்றேல்
வீழ்மழையும் வருமோ?
நளினமலர் இதழ் நிகர்த்த
நாவலால் சொல்லேது?

*　　*　　*

நாவின்றேல் ருசியுண்டோ?
நனவும் தெளிவுறுமோ?
பாவின் நயம் வெளிப்படுமோ?
பண்ணும் உயிர்த்திடுமோ?
பூவினிலே வாய்மைதனை
புரக்கல் நாவதன்றோ?
தேவர்களும் விரும்பமிர்தம்
தேக்கல் நாவிலலவோ?

*　　*　　*

எண்ணரிய வடிவங்களில்
இயங்கும் நாவினொழிலே;
திண்மலையின் அருவியிலே
திகழுமிது பாரீர்!
விண்விளக்கும் ரவியதனின்
வீறுசுடர் நாவே!
தண்ணிழலை அருளும் ஆலின்
தருவிழுதும் நாவே!

* * *

ஞானமது வேண்டுமெனில்
நாவதனை காப்பீர்.
தீனர்களை காப்பவரின்
திருத்துணைவன் நாவே.
ஊனநெறி வகையினிலே
ஓட்டாதீர் நாவை.
வானிலவில் வந்த தமிழ்
வாழ்ந்திடுக நாவே!

# மறு பிறப்பு

நரியது ஒன்று இறந்ததாலோ—இந்த
நாட்டில் அமைச்சன் பிறந்து விட்டான்.
வெறிகொண்ட குக்கல் இறந்ததாலோ—இங்கு
வீரப் பேச்சாளன் பிறந்து விட்டான்?

காட்டுக் குரங்கே இறந்ததாலோ—இங்கு
கவிஞன் என்பானும் பிறந்து விட்டான்?
ஆட்டுக்குட்டி யொன்றிறந்த தாலோ—இங்கு
ஆலாத்தி பாடகன் தோன்றி விட்டான்?

சிட்டு ஒன்று இறந்ததாலோ—இங்கு
தேவடியாளென்பாள் மேவி விட்டாள்?
குட்டை தவளை இறந்ததாலோ—இங்கு
குழந்தைக்கு ஆசான் பிறந்து விட்டான்?

இந்துமதத்தின் ஆணிவேராய்—இங்கு
இருக்கும் ஆராய்ச்சி மறுபிறப்பாம்!
சிந்திப்பீர் நீங்கள் இறந்தபின்னர்—பெறும்
திருவடிவும் என்ன செப்புவீரா?

# ஓர் இரவு!

பட்டப் பகலைப்போல
பால்நிலவு காயயிலே!
குட்டி வந்து காத்திருந்தாள்
கொய்யாத் தோப்பு ஓரத்திலே!

* * *

கொட்டும் குளிர் பனியில்
கோரைப்புல்லு மெத்தைமேலே
கட்டிக் கலந்திருந்தோம்
கற்கண்டினிப்பு போல

* * *

கிழக்கே மானம் வெளுக்க
'கீச்' சென்று பறவை கத்த
வழக்க சாம கோழிகூவல்
வந்தது எம பாசம்போல

* * *

அத்தனுக்கு பயந்துகொண்டு
அத்தானே போய் வாரேனென்று
முத்தம் ஒன்று கொடுத்து
முக்காடு போட்டே நடந்தாள்

# இந்து முஸ்லீம்?

ஒருமுகத்தில் தோன்றுமிரு கண்கள் போல
உயர்வானில் சுழல்இரண்டு சுடர்கள் போல
இருதரத்தார் அன்பென்னும் மதபீடத்தில்
இருக்குங்கால் எதற்காக மரணபூஜை?

மகமதியன் என்றால் தலைமழுக்க சரைத்து
மாட்டுமொரு குல்லாவும் சின்னமானால்
அகத்தினிலே அவர்மனைவி என்றிருக்கும் பெண்கள்
அருங்கூந்தல் வளர்ப்பதிலே அர்த்தமுண்டா?

புனிதமிகு இந்துவெனில் பூணூல்சாற்றி
போதெல்லாம் கீதைசொலல் சின்னமானால்
கனிவுடனே அவர்மனைவி என்ற பெண்கள்
கவின்தோளை பூணூலே தழுவிடாதோ?

வழுவுடைய அரசியலை முன்னே வைத்து
வாதுக்கு ஜாதிமத சண்டையிட்டால்
கொழுப்படைவார் அந்நியரே இரு பூனைக்கு
குணநீதி கூறவந்த குரங்கு போல

# ஆசி

அன்புமிகுந்த ஓர் நண்பனுமே—என்னை
அவசியம் வாவென அழைப்பனுப்ப.
சென்றனன் நடுவழி தனிமையிலே—பனி
திரையிடும் காலைப் பொழுதினிலே

வதுவை நடைபெறும் வீட்டடைந்தேன்—அங்கு
வாத்தியம் யாதெனில் கடமையதே.
புதுமை எழிலொடு வீற்றிருந்த—மணப்
பூவையே யாரெனில் அழுகையதே.

கங்கணம் கட்டிய மணமகனை—யான்
கண்டேன் யாரெனில் சிரிப்பதுவே.
மங்களம், மந்திரம், தானுரைக்க—அங்கு
மறையோன் யாரெனில் காதலதே

அன்பனும் யென்றன் அருகடைந்து—நல்
ஆசி, புகல், மணமக்களுக்கே
“என்றுரைத்திட நாமனுரைத்தேன்—இனி
அழுதல் சிரிக்கும், சிரித்தல் அழும்”

## விரைவில் வெளி வருகிறது.

1. சோஷலிஷம் எங்கே?

(பி. எஸ். சுப்பராமன், எம். ஏ.)

●

2. சமூகப் படம்?

(அருணன்)

●

## நிழல் காரியாலயம்

திருவல்லிக்கேணி, சென்னை 5




விலை ரூ. 0-6-0

T18
R004

Wrapper Printed at The Modern Printers, Madras.